**தலைப்பு 264 – யாழ்ப்பாண மாவட்ட செயலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 21 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 15 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

லங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாவட்ட செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | புந்திக்கான தொடர்பு |
|---|---|
| மற்றொருவருக்குச் சொந்தமான சொத்தொன்று நடைமுறையல்லாத சொத்தாகக் கருதப்படுகிறது | 1.6.1(அ) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் அரச விடுதிகள் மற்றும் பங்களாக்களில் இருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 280,438 தொகையான வாடகை வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமாகக் காட்டப்படவில்லை. | இது எதிர்காலத்தில் வருமானமாக காட்டப்படும். | அனைத்து வாடகை வருமானமும் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றிற்கும் முற்பண கணக்கு கூற்றிற்கும் இடையே ரூபா 5,032,037 வேறுபாடு காணப்பட்டது. | இது கணக்கிணக்கக் கூற்றின் இணைப்பு 1 இல் சரியாகக் காட்டப்பட்டுள்ளது. | கணக்கீட்டு கூற்றுகளுக்கு இடையே ஒத்த புள்ளிவிபரங்களை ஒப்பிடுவது சாத்தியமாக இருக்க வேண்டும். |
| (இ) | பிரதேச செயலகம் ஒன்றிற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் சரியான மதிப்பிடப்பட்ட பெறுமதியைக் கணக்கீடு செய்யாததன் காரணமாக நிதி நிலைமை கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 77,621,167 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | தற்போது சிகாஸ் மென்பொருளில் சரியான பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலையான சொத்துகளின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மாவட்டச் செயலகம் மற்றும் 02 பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான 05 கட்டிடங்கள் மற்றும் 11 மோட்டார் சைக்கிள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக நிதி நிலைமை கூற்று நடைமுறையல்லாத சொத்துக்களின் சரியான பெறுமதியை பிரதிபலிக்கவில்லை. | உரிய சொத்துக்களின் மதிப்பீட்டு பெறுமதிகள் பெறப்பட்டவுடன் அவை கணக்கீடு செய்யப்படுகின்றன. | -மேற்படி- |
| (உ) | நிதி நிலைமை கூற்றில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறையல்லாத சொத்து மீதி மற்றும் 2021 சனவரி 01 இல் உள்ளவாறான திறைசேரி குறிப்புக்கள் என்பன ஒரே மாதிரி இருக்க வேண்டிய போதிலும் அவற்றுக்கிடையே ரூபா 55,071,292 வேறுபாடு காணப்பட்டது. | இவ் விடயம் குறித்து அரச கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (ஊ) | 04 பிரதேச செயலகங்களில் ரூபா 256,500 பெறுமதியான 09 மோட்டார் சைக்கிள்கள் கைதவிர்ப்பு செய்யப்பட்டமை கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக நிதி நிலைமை கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்கள் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளன. | கைதவிர்ப்பு செய்தலை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | -மேற்படி- |
| (எ) | ரூபா 2,600,000 பெறுமதியான மாவட்டச் செயலகத்துக்குச் சொந்தமான வான் ஒன்று கணக்கீடு செய்யப்படாததால் நடைமுறையல்லாத சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | இந்த வாகனத்தின் பெறுமதியை உடனடியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஏ) | திறைசேரி கணனி அச்சீட்டுத் தாளின் பிரகாரம் காட்டப்பட்டுள்ள பெறுமதியை விட மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களின் கொள்வனவுகள் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 55,145,349 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | இவ் விடயம் குறித்து அரச கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (ஐ) | மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தில் நிலையான சொத்துக்களுக்கு ஏற்பட்ட ரூபா 2,663,709 சேதம் கணக்கீடு செய்யப்படவில்லை. | தவறுதலாக அது நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்படவில்லை. | கொடுக்கல்வாங்கல்கள் சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | ரூபா 2 மில்லியன் பெறுமதியான காரைநகர் பிரதேச செயலகம் அமைந்துள்ள காணி தனியார் தரப்பிற்குச் சொந்தமானதாக காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றில் அப் பெறுமதி நடைமுறையல்லாத சொத்துக்களில் காட்டப்பட்டுள்ளது. இந்தக் காணியில் ரூபா 58.14 மில்லியன் கிரயத்தில் அலுவலகக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் 2020 யூன் 30 வரை இக் காணியின் உரிமைத்துவம் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | தனியார் காணி அரசாங்கத்தால் கையேற்கப்பட வேண்டும். |

**(ஔ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் ஏனைய சில பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு முறையாக பேணப்பட்டிருக்காதமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | **பிணை பதிவேடு**<br><br>நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வழங்க வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் விபரங்களைக் கொண்ட பிணைப் பதிவேடு நானதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | **மின் பொருத்துக்களின் பொருளிருப்பு பதிவேடு**<br><br>நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின் பொருத்துக்களின் பொருளிருப்பு பதிவேடு 8 ஆண்டுகளுக்கும் மேலாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | **நட்டங்கள் தொடர்பான பதிவேடு**<br><br>நாளதுவரை நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iv) | **பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு**<br><br>நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (v) | **பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் வருகைப் பதிவேடு**<br><br>அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 2.11.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் குழுவின் செயலாளர் 8 ஆண்டுகளுக்கும் மேலாக வருகைப் பதிவேட்டை நாளதுவரையாக்கியிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (vi) | **கேள்வி கோரல் பதிவேடு**<br><br>கேள்வி கோரல் பதிவேடொன்று 8 ஆண்டுகளுக்கும் மேலாக நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (vii) | **நிலையான சொத்துகள் பதிவேடு**<br><br>நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் அதன் பின்னிணைப்பு II இல் காட்டப்பட்டவாறு நிலையான சொத்துகள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**(ஔ) கணக்காய்விற்கான சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச செயலகம் ஒன்றிற்கு சொந்தமான காணி ஒன்றின் பெறுமதி ரூபா 13,200,000 என நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் உரிமைத்துவத்திற்கான சான்றுகள் காணப்படவில்லை. | இது 2021 ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் கையேற்கப்படுவதற்காக வர்த்தமானியாக வெளியிடப்பட்டிருந்தது. இது கையேற்கப்பட்டதும் சிகாஸ் மென்பொருள் பொதியில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | காணியின் உரிமைத்துவத்தை நிரூபிக்கும் சான்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலவினங்கள் முறையாக மதிப்பிடப்படாததால், 08 செலவின விடயங்களில் மீதமாக உள்ள ரூபா 12,710,000 தொகையான ஒதுக்கீடு ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டது. | செலவின விடயங்களுக்கு இடையேயான மாற்றங்கள் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் உடன்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. | செலவினங்களுக்கான மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 08/2019 ஆம் இலக்க உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு முரணாக பிரதேச செயலகம் ஒன்று உபசரணை செலவினங்களாக சம்பளத்திற்கு மாதாந்த படியாக ரூபா 210,000 தொகையை வழங்கியிருந்தது. | தற்போது தனியான கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் செய்யப்பட்ட ரூபா 1,068,434,962 தொகையான பணிகளுக்காக நிதி எதுவும் பெறப்படாததால் கொடுப்பனவுகள் பொறுப்புக்களாகவே இருந்தன. | திறைசேரியில் இருந்து நிதி விடுவிக்கப்படாததால் அவை கையில் விலைப்பட்டியல்களாக காட்டப்படுகின்றன. | நிதி கிடைத்தவுடன் பொறுப்புக்கள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 19 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 3,263,094,323 ஒதுக்கீட்டில் ரூபா 1,125,558,486 தொகையான அல்லது 34 சதவீதமான ஒதுக்கீடு சேமிக்கப்பட்டது. அந்தச் சேமிப்புக்கள் தொடர்புடைய செலவின விடயங்களின் தேறிய ஒதுக்கீட்டில் 05 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டன. | திறைசேரி நிதியை விடுவிக்காதமை மற்றும் செலவின விடயங்களின் ஒதுக்கீடுகள் தடைப்பட்டமை என்பன இதற்குக் காரணமாகும். | -மேற்படி- |

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் பிற்சேர்க்கை 35 இன் பிரகாரம் பிராந்திய பெறுகை குழுவினால் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான அதிகபட்ச எல்லை ரூபா 01 மில்லியனாகும், ஆனால் அந்த எல்லையை மீறி 06 பிரதேச செயலகங்கள் ரூபா 35,924,074 கூட்டுமொத்தமான கொள்வனவுகளை மேற்கொண்டிருந்தது. | எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்படும். | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 137 இற்கு முரணாக 02 பிரதேச செயலகங்கள் கொடுப்பனவிற்கான அங்கீகாரம் இன்றி ரூபா 2,916,452 தொகையான உறுதிச்சீட்டுக்கள் சார்பாக கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தன. | -மேற்படி- | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | (i) நிதிப்பிரமாணம் 138 இற்கு முரணாக 03 பிரதேச செயலகங்கள் ரூபா 4,625,338 தொகையான சான்றுறுதிப்படுத்தப்படாத உறுதிச்சீட்டுக்கள் சார்பாக கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தன. | -மேற்படி- | -மேற்படி- |
| | (ii) 07 பிரதேச செயலகங்கள் நிதிப்பிரமாணம் 137, 138, 139 மற்றும் 237 இற்கு முரணாக கொடுப்பனவை உறுதிப்படுத்தும் சான்று இல்லாமல் உறுதிச்சீட்டுக்களுக்கு ரூபா 33,723,077 கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தன. | சில ஆதாரப்படுத்தும் ஆவணங்களில் உள்ள குறைபாடுகள் தற்போது சீர்செய்யப்பட்டுள்ளன. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மாவட்டச் செயலகம் மற்றும் 07 பிரதேச செயலகங்கள் நிதிப்பிரமாணம் 137 மற்றும் 138 இற்கு முரணாக பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் ரூபா 119,543,789 தொகையான 300 காசோலைகளை எழுதி அவற்றை அலுவலகத்தில் வைத்திருந்தன. | தற்போது குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு மேற்படி காசோலைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |

**2.5 வைப்பு மீதிகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 02 பிரதேச செயலகங்களினால் மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்பட வேண்டிய மொத்த கொடுப்பனவு தொகை ரூபா 393,990 ஆக இருந்ததுடன் 06 மாதங்களுக்கும் மேலாக குறித்த நபர்களுக்கு வழங்கப்படாமல் தற்காலிக வைப்பு கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | தீர்ப்பனவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும். | இத் தற்காலிக வைப்புக்கள் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு உடனடியாக மீளளிக்கப்பட வேண்டும். |
| (ii) | 03 உயர் தொழில்நுட்ப கழிவுநீர் முறைமைகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக மாவட்ட செயலகம் மற்றும் 02 பிரதேச செயலகங்களினால் ரூபா 23,728,618 தொகை பெறப்பட்டது. இப் பணம் 06 மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரையான காலமாக இது தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கோ அல்லது இதனை தீர்ப்பனவு செய்வதற்கோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டது. | மேற்படி வைப்புக்களை உடனடியாகத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த காலத்திற்குள் இந்த வைப்புக்களை உரிய தரப்பினருக்கு மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 206 இன் பிரகாரம் ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புக்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,037,026 கொடுப்பனவுகள் இரண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது அனைத்து உறுதிச்சீட்டுக்களும் சீர்செய்யப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தினால் நிதிப்பிரமாணம் 571 இற்கு முரணாக 02 வருடங்களுக்கும் மேலாக வைப்புக் கணக்கில் ரூபா 1,643,767 கூட்டுமொத்தமான ஆறு நிறுத்திவைத்தல் பண வைப்புக்கள் வைக்கப்பட்டிருந்தன. | வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2.6 வங்கி கணக்குகளின் செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் செலவினங்களாகக் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 16,382,753 தொகையான காசோலைகள் 02 பிரதேச செயலகங்களால் நிதிப்பிரமாணம் 141 மற்றும் 386 இற்கு முரணாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அக் காசோலைகள் வரைபவர்களின் கையொப்பங்களைக் கூட கொண்டிருக்கவில்லை. | தற்போது அனைத்து விடயங்களும் சீர்செய்யப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு அடைந்துகொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நீர்வேலி வாழைக்காய் சிப்ஸ் உற்பத்தி செயற்திட்டத்திற்குத் தேவையான கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் 2020 யூன் மாதத்தில் நிறுவப்பட்டு, நீர்வேலி வாழைக்காய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனை கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டன. அன்று முதல் இன்று வரை அந்தச் சொத்துக்கள் அனைத்தும் பயன்படுத்தப்படாமலும், 02 ஆண்டுகளாக முறையான பராமரிப்பின்றியும் உள்ளன. உற்பத்திக் கிரணம் அதிகமாக உள்ளது என்றும், உற்பத்தித் தேவைக்கு இயந்திரம் பொருத்தமற்றது என்றும் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்க நிர்வாகம் கருத்து தெரிவித்தது. | இந்த இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்திச் செயன்முறை ஆரம்பிக்கப்படும் என மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். | செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முன்னர் சரியாகத் திட்டமிடப்பட்டு, அவற்றின் வெற்றியை உறுதி செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு, பயன்படுத்தப்படாத சொத்துக்கள் செயற்திறனான முறையில் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆனால், இந்த செயற்திட்டத்திற்கு செலவிடப்பட்ட ரூபா 10,325,421 தொகை முறையான சாத்திய வள ஆய்வு இல்லாததால் பயனற்றதாகியிருந்தது.. | | |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் வாழ்வாதார பயிற்சி நிலையத்திற்கான கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 1,980,000 தொகை செலவிடப்பட்டு கட்டிடத்தின் அடித்தளம் மற்றும் ஒரு சில தூண்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டு பின்னர் நிர்மாணம் கைவிடப்பட்டது. | இந்தப் பயிற்சி நிலையம் பயன்படுத்தப்பட்டு வருகிறதென பதிலில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது தவறான கூற்று என பௌதீக கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |

### 3.2 பெறுகை

2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் ஏற்பாடுகளை மீறிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு உள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 02 பிரதேச செயலகங்கள் பெறுகை செயன்முறையை பின்பற்றாமல் ரூபா 1,672,462 தொகையான பொருட்களை கொள்வனவு செய்திருந்தன. | பெறுகை செயன்முறையை பின்பற்றுவதற்கு போதுமான நேரம் இல்லாததால் ஏற்கனவே மாவட்ட செயலகத்தால் எடுக்கப்பட்ட பெறுகை தீர்மானங்களின் அடிப்படையில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாடடல்களின் 3.6 ஆம் பிரிவிற்கு முரணாக 07 பிரதேச செயலகங்கள் மூல ஒப்பந்த பெறுமதியில் 50 சதவீதம் வரையான மீள்கொள்வனவிற்கு ஏற்கனவே உள்ள எல்லைக்கு அப்பால் 60 சதவீதம் முதல் 24,700 சதவீதம் வரையான வீச்சில் மீள்கட்டளைகள் மூலம் ரூபா 30,201,478 பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்திருநாதது. | எதிர்காலத்தில் இதுபோன்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்படும். | -மேற்படி- |
| (இ) | பெறுகை வழிகாட்டலின் 4.1 மற்றும் 4.4 இன் பிரகாரம் ஒரே பெறுகை ஒரே நேரத்தில் பிரிக்கப்படாமல் செய்யப்பட வேண்டும். ஆனால் நியாயமான காரணங்களின்றி, 02 பிரதேச செயலகங்கள் ரூபா 8,207,258 | ஏற்கனவே பெறப்பட்ட கோரிக்கைகளுக்கு பகுதிகளாக கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், டொலர் பற்றாக்குறை காரணமாக பெறுகை செயன்முறையில் இணங்கப்பட்ட | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுமொத்தமான 02 செயற்திட்டங்களின் பெறுகையை பல பகுதிகளாக பிரித்திருந்தன. | விலைகளில் அதிக பொருட்களை வழங்குவதற்கு முன்வரவில்லை, எனவே மீண்டும் கேள்வி கோரப்பட வேண்டியிருந்தது. | |
| (ஈ) | பிரதேச செயலகமொன்று பெறுகை வழிகாட்டல்களின் 5.4.8 (அ) பிரிவின் பிரகாரம் ரூபா 290,366 செயலாற்றல் பிணைமுறியை பெற்றுக்கொள்ளாமல் 02 ஒப்பந்தங்களின் சார்பாக உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டிருந்தது. | செயலாற்றல் பிணைமுறி தவறுதலாக ஒப்பந்ததாரரிடமிருந்து பெறப்படவில்லை. ஆனால், குறித்த காலத்துக்குள் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்படும். | செயலாற்றல் பிணைமுறிகள் பெறப்பட வேண்டியதுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட வேண்டும். |
| (உ) | பெறுகை வழிகாட்டல்களின் 8.9 ஆம் பிரிவின் பிரகாரம் 03 பொருட்களின் கொள்வனவுகளுக்கு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவில்லை, இதன் பெறுமதி 03 பிரதேச செயலகங்களால் வழங்கப்பட்ட ரூபா 8,432,824 கூட்டுமொத்தமான பெறுகையின் பிரகாரம் ரூபா 500,000 இற்கு மேற்பட்டதாகும். | எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்களில் அதிக கவனம் செலுத்துமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

## 3.3 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேச செயலகங்களால் கோரப்பட்ட கேள்வி விலைகளின் அடிப்படையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பதிலாக மாவட்ட செயலகம் மீண்டும் விலைகளை கோரி அதிக விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்ததால் ரூபா 1,763,627 நிதி இழப்பு ஏற்பட்டது. | வழங்குநர்களுக்கு அதிகளவிலான கட்டளைகளை வழங்கும் போது பிரதேச செயலகத்தினால் கோரப்பட்ட கேள்வி விலைகளில் பொருட்களை வழங்க முடியாது என அறிவிக்கப்பட்டதன் காரணமாக மாவட்ட செயலகத்தினால் பெறப்பட்ட கேள்வி விலைகளிற்கு ஏற்ப கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டன. | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகம் தனியான பெறுகையில் கொள்வனவு செய்யப்பட்டிருக்க வேண்டிய 02 நீர் நிரப்பும் இயந்திரங்களை 02 பெறுகைகளில் கொள்வனவு செய்ததன் காரணமாக ரூபா 724,293 நட்டம் எற்பட்டிருந்தது. | டொலர் தட்டுப்பாடு காரணமாக, தற்போதுள்ள கேள்வி விலையில் பொருட்களை வழங்க முடியாது என அறிவிக்கப்பட்டதால் மீண்டும் கேள்வி கோரப்பட்டது. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| (இ) ரூபா 56,640,750 கிரயத்தில் 2019 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பால் பாதுகாப்பு செயற்திட்டம் 2022 யூலை வரை பூர்த்தி செய்யப்படவில்லை. எனினும், மாவட்டச் செயலகம் ரூபா 4,822,238 தொகையான செயலாற்றல் பிணைமுறியை அசல் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளாமல் ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டதால் உடன்படிக்கைகளை மீறுவதற்கு எதிராக பிணைமுறியை வருமானத்திற்கு செலவு வைக்க முடியாது. | நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களின் தொகைக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு, இயந்திரங்களின் ஒரு பகுதி பெறப்பட்ட போதிலும் அதற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. செயலாற்றல் பிணைமுறி ஒப்பந்ததாரரால் நீடிக்கப்பட்டிருக்கவில்லை.மேலும் பிழை காரணமாக பிணைமுறி பணமாக மாற்றப்படவில்லை. ஆனால், தற்போது முடிவுறுத்தல் அடிப்படையில பணி நடைபெற்று வருகிறது. | பிணைமுறியின் அசல் பிரதிகளை பெற்று உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். |

### 3.4 உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மாவட்டச் செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுச் பரிசோதனைகளில் காசோலைகளை பணம் பெறுபவருக்கு வழங்குவதற்குப் பதிலாக காசோலைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் கையொப்பமிட்டு காசோலைகளை பெற்றுக்கொண்டமை அவதானிக்கப்பட்டது. | பெறுநரின் கையொப்பம் மற்றும் இறப்பர் முத்திரை என்பன காசோலை அடியிதழ்சேர் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டு காசோலைகள் வழங்கப்பட்டன. | காசோலைகளை பெறுபவரிடம் ஒப்படைக்க வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட 1,456 பதவியணி பதவிகளில் 188 வெற்றிடங்களும், 485 மேலதிகங்களும் உள்ளன. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | தேவையானவாறு வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மேலதிக பதவியணியினரை வேறு அலுவலகங்களுக்கு நியமிப்பதற்கும் தொடர்புடைய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |